# பாரதிதாசன் பல்கலைக்கழகம்
## தேர்வுநெறியாளர் அலுவலகம் (தொலைக்கல்வி மையம்)
## திருச்சிராப்பள்ளி – 620 024

முனைவர். க. துரையரசன் M.A., M.Ed., M.Phil., Ph.D.,
தேர்வுநெறியாளர்

அலுவலகம்: 0431-2407027 (Extn.210)
மின்னஞ்சல்: cde.exams@bdu.ac.in
இணையதளம்: www.bdu.ac.in/cde


ந.க.எண்: தொ.க.மை./ பி.எட் தேர்வுகள்/ நவம்பர்-2019/நாள்: 20.09.2019.

## அறிவிப்பு

தொலைக்கல்வி மையத்தில் இளங்கல்வியியல் - பி.எட். பட்டப்படிப்புகளில் பயிலும் / பயின்ற மாணவர்களுக்கு நிலுவையிலுள்ள எழுத்துத்தாள்களுக்கு நவம்பர்-2019-ல் தேர்வுகள் நடைபெறவுள்ளன. தேர்வு விண்ணப்பத்தினை பல்கலைக்கழக இணையதளத்தில் (www.bdu.ac.in/cde) இருந்து பதிவிறக்கம் செய்து, **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேர்வு கட்டண இரசீதை (Online Payment Receipt)** இணைத்து **தேர்வு நெறியாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி – 620024** என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். தேர்வுக்கான கட்டண விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| இனங்கள் விபரம் | கட்டணம் |
|---|---|
| 1. விண்ணப்பப் படிவ செயலாக்கக் கட்டணம் (Processing Fees) | Rs. 50/- |
| 2. மதிப்பெண் பட்டியல் கட்டணம் | Rs. 100/- |
| 3. எழுத்துத் தேர்வுக் கட்டணம் - **தாள் ஒன்றுக்கு** | Rs. 500/- |
| 4. **இறுதியாண்டு மாணவர்களுக்கு மட்டும் (For Final Year Students Only)**<br>கூட்டு மதிப்பெண் பட்டியல் கட்டணம்<br>தற்காலிகச் சான்றிதழ் கட்டணம் | <br>Rs. 200/-<br>Rs. 200/- |

**பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்களைப் பெறுவதற்கு கடைசி நாள் :**

**தண்டத் தொகையின்றி : 11.10.2019 (வெள்ளி)**
**தண்டத் தொகையுடன் (ரூ. 354/-) : 18.10.2019 (வெள்ளி)**
(சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட)

**விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசிய நாள்: 21.10.2019 (திங்கள்)**

**இளநிலை கல்வியியல் (பி.எட்) எழுத்துத் தேர்வுகள் தொடங்கும் நாள்: 13.11.2019 (புதன்)**

**எழுத்துத்தேர்வு நடைபெறும் இடம் : தொலைக்கல்வி மையம்**
**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**
**திருச்சிராப்பள்ளி – 620 024.**

**மாணவர்களுக்கான குறிப்புகள்:**

1. தேர்வுக் கட்டணம் (www.bdu.ac.in/cde) என்ற பல்கலைக்கழக இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள “Online Payment” என்ற முறையில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.
2. தேர்வுக் கட்டணம் “Online Payment” முறையில் கட்டணம் செலுத்தும் போது EXAM FEES என்ற முறையில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும். மற்ற முறையில் செலுத்தும் கட்டணம் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. மாணவர்கள் தேர்வு எழுதும் தாள்களின் தலைப்பு (Title of the paper) மற்றும் அதற்குரிய பாடக் குறியீடு (Subject Code) பல்கலைக்கழக இணைய தளத்தில் (www.bdu.ac.in/cde/subject_codes.php) பார்த்துக் கொள்ள வேண்டும்.
4. மீளப்பயிலுதல் (Re-doing) மறு சேர்க்கை (Re-admission) மாணவர்கள் பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட மீளப்பயிலுதல் (Re-doing Order), மறு சேர்க்கை (Re-admission Order) மற்றும் கூடுதல் தாள் (Additional Paper) ஆணையின் நகல்களையும் தேர்வு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
5. தேர்வு கால அட்டவணை, மற்றும் பிற அறிவிப்புகள் பல்கலைக்கழக இணைய தளத்தில் (www.bdu.ac.in/cde) மட்டுமே வெளியிடப்படும்.
6. தேர்வு நுழைவுச் சீட்டு (Hall Ticket) பல்கலைக்கழக இணையத்தளத்தில் (www.bdu.ac.in/cde) இருந்து தேர்விற்கு குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னர் மாணவர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
7. கடைசி தேதிக்குப் பின் பெறப்படும் தேர்வு விண்ணப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தேர்வு நெறியாளர்**